# தமிழண்ணலின் குறுந்தொகைச் செல்வம்: வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம்

கா.ராஜகணபதி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

**முன்னுரை**

குறுந்தொகை நூலிற்குப் பல்வேறு உரைகளும், பதிப்புகளும் வெளிவந்துள்ளன. அந்நூல் குறித்துத் தமிழறிஞர்கள், பொதுநிலை இலக்கிய ஆர்வலர்கள், கல்விப்புல ஆய்வாளர்கள் போன்றோர் பல நிலைகளில் விமர்சன நூல்கள் எழுதியுள்ளனர். அவ்வகையில் தமிழண்ணல் குறுந்தொகை பற்றி குறுந்தொகைச் செல்வம்:வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம், குறுந்தொகைக் குறும்படம்:உள்ளங்கள் ஒன்றிடும் அன்றில் பறவைகள், குறுந்தொகை அறிமுகம்:உச்சத்தைத் தொடும் உணர்ச்சி ஓவியங்கள், குறுந்தொகை விருந்து:மனத்தைக் கவரும் மாணிக்கப் பரல்கள் ஆகிய நான்கு நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் ‘குறுந்தொகைச் செல்வம்: வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம்‘ என்னும் நூல் உணர்த்தும் செய்திகளை விளக்குவதே இக்கட்டுரையாகும்.

**நூல் உணர்த்தும் செய்திகள்**

“குறுந்தொகைச் செல்வம் வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம்“ என்னும் இந்நூல், ’செவ்விலக்கியக் களப்பயிற்சித் தொடர்’ சான்றிதழ் வகுப்பிற்காக எழுதப்பெற்றுள்ளது. உலக மரபு வழிக்குரிய குறும்பாடல்களின் கருவூலமாகத் திகழ்வது குறுந்தொகை என்னும் கருத்தை நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ச் செவ்வியல் இலக்கியம், உலகச் செவ்வியல் இலக்கியங்களிலிருந்து வேறுபட்டு ஒரு தனித்தன்மை கொண்டதாக இருப்பதற்குரிய காரணம் குறிக்கப்பெற்றுள்ளது. கிரேக்கம், இலத்தின் போன்ற இலக்கியங்களில் தொன்மையில் கடவுள்கள், தேவதைகள், கலப்பட மாந்தர்கள் இடம்பெறும் நிலையில் தமிழ்ப் பழம்பாடல்களில் மனிதர்கள் இடம்பெற்றுள்ளனர். இதுமட்டுமின்றி தமிழ்ச் செவ்விலக்கியத்தில் உயர்வு நவிற்சி மிகக்குறைவாகவும், ஓரளவு நம்பக்கூடியதாகவும் இருக்கும்நிலையில், ஏனைய உலக இலக்கியங்களில் நம்ப முடியாத நிகழ்வுகள், இயற்கை யிறந்த புனைவுகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகத்திலுள்ள உயிர்களுக்கு இயல்பாக இருப்பது வயிற்றுப்பசி, காமப்பசி (உடற்பசி), உயிர்ப்பசி ஆகிய மூன்று பசிகள் என்று சொல்லும் நூலாசிரியர் இவற்றுள் காமப்பசி என்ற பாலுணர்வு உந்துதலை ஒரு நெறிக்குள் கொண்டு செல்வதற்கே அகத்திணைப்

படைப்புகள் தோன்றின என்பதையும் உணர்த்தி, பழங்காலச் சமூகம் ஆணாதிக்கம் கொண்டதாக இருப்பதால் மென்மைமிக்க பெண்ணுடன் சமூகம் விளையாடியது. இதற்கு ஆண்களேயன்றிப் பெண்களும் காரணமாகின்றனர் என்பதையும் உணர்த்தி அப்பெண்ணின் மனஉணர்வு நிலைகள் ஆணைப் பற்றியதாக அமைந்துள்ளது. அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் சங்கப்புலவர்கள் பாடல்களை இயற்றியுள்ளனர் என்கிறார். இம்முறை வழியாகப் பெண்ணானவள் தன்நிலை பற்றி வருந்திக் கண்ணீர் விடுவதற்கும், அடிமை நிலை மாறுவதற்கும் முயற்சி செய்ததை உணர்ந்தாலும் ‘‘பெண்ணடிமை‘‘ தீர்ந்ததா? என்பது தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே தற்போதைய நடைமுறை வாழ்க்கை நிலையில் அனைவரும் பெண்களைச் சமமாகக் கருதவேண்டும் என்பது நூலாசிரியரது எதிர்பார்ப்பாக இருக்கிறது. அதன்பின்,

**"செங்களம்படக் கொன்று அவுணர்த் தேய்த்த"**

எனத் தொடங்கும் குறுந்தொகையின் முதற்பாடலுக்கு விளக்கம் அளிக்கப்பெற்றுள்ளது. அப்பாடலில் குறிப்பாகத் தலைவி மீது தலைவனுக்குக் காதல் ஏற்பட்டுள்ளதால், அக்காதலை அவள் ஏற்பாளா? என்பதை அறியும்பொருட்டு அவன் தழையுடையுடன் வந்துள்ளான். இதனைத் தோழி எங்களுடைய முருகனது மலைமீதும் செங்காந்தட் பூக்கள் அதிகளவு இருப்பதால் அதற்கு மறுப்புத் தெரிவித்து மறைமுகமாகத் தலைவனது காதல் உடனே ஏற்கப்படவில்லை என்பதையும் அறியலாம் என்று குறிப்பிடும் நூலாசிரியர் இப்பாடலின் சுவையைத் தொல்காப்பியரது ‘முன்னம்‘ என்ற இலக்கியக் கொள்கை வழி உய்த்துணரலாம் இது கவிதையிற் சிறந்த கவிதைக்கான அடையாளம் கொண்டது என்று குறித்துள்ளார்.

சங்க அகப்பாடல்களில் பிரிவை உணர்த்தும் பாடல்கள் அன்பின் முக்கியத்துவத்தை அறிவதற்கு உதவுகின்றன என்னும் கருத்து சொல்லப்பெற்றுப் பிரிவுகளில் ‘பரத்தையர்ப்பிரிவு‘ மட்டுமே கொடுமையானது என்று விளக்கியுள்ளார். இத்தகைய சமுதாயக் குற்றத்தைப் பாடிய புலவர்கள் மீதும், இலக்கியத்தின் மீதும் சுமத்துவதும் சரியன்று சமுதாயத்தைத் திருத்தும் நோக்கத்துடனேயே இவ்வகையான பாடல்களைப் புலவர்கள் பாடியுள்ளனர் என்று சிந்திப்பதே கற்றவர்களுக்கான உண்மை நிலையாகும் என்பதனைச் சுட்டியுள்ளார்.

நல்ல குடும்பத்தில் நடைபெறும் காட்சிகளை எடுத்துக்காட்டும் விதத்தில் அமைந்ததே ‘‘முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்‘‘ எனத் தொடங்கும் குறுந்தொகை (167) பாடலாகும்.இப்பாடலில் புதிதாகத் திருமணமான பெண்ணாகியத் தலைவியின் சமையலைச் சாப்பிடும் அவளது கணவனாகியத் தலைவன் அதனை ‘இனிது‘ என்று பாராட்டுகிறான். இதன்வழித் தனது மனைவி மிகவும் சிரமத்துடன் செய்த சமையலைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் கணவனுக்கு ஏற்பட்டுள்ளது.இந்த எண்ணம் இன்றைய சமூகத்தில் வாழும் கணவன்களுக்கும் ஏற்படவேண்டும் என்று நூலாசிரியர் குறிப்பிட்டு, இப்பாடல் தமிழ்நாட்டிலுள்ள வீடுகளில் ஒட்டிவைக்கப்படவேண்டும் என்பதனை,

**‘‘சீனர்கள் சுவையான இலக்கியக் காட்சிகளை, அழகிய ஓவியமாக**
**எழுதி அதன் எதிரே பாடலையும் எழுதி, நல்ல வண்ணமிகு**
**சுவரொட்டிகளை, கண்ணில் படுமாறு வீடுகளிலும்**
**அலுவலகங்களிலும் பள்ளிகளிலும் பொது இடங்களிலும் ஒட்டி**
**வைப்பார்களாம். அதனால் அங்கு இலக்கியம் பொதுமக்களால்**
**நன்கு உணர்ந்து போற்றப்படுகிறது. தமிழிலும் வீடுகள்தோறும்**
**ஒட்டிவைக்கக் கூடிய அழகிய ஓவியக் காட்சி இது‘‘ (ப. 16)**

என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சங்க அகப் பாடல்கள், தலைவன் பரத்தையருடன் ஆடித் திரிந்ததைக் காட்டாமல், அவ்வாறு இருந்தவன் வெட்கப்படும்படியாக இடித்துரைக்கும் நிலையைக் காட்டியுள்ளன. ஆகவே அக்காலத்திலிருந்த சமுதாய நிலையில் தீங்கைக் களையவே இப்பாடல்கள் பாடப்பெற்றன என்று சொல்லி அதற்குரியச் சான்றாக,

**‘‘உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்**
**தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி**
**விழவொடு வருதி நீயே இ∴தோ**
**ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை**

**பெருநலக் குறுமகள் வந்தென**
**இனிவிழவாயிற்று என்னும் இவ் வூரே“ (குறுந். 295)**

என்ற பாடலைக் காட்டியுள்ளார் இந்நூலாசிரியர்.

தற்போதைய உலகில் தலைவன், தலைவியாகக் கருதப்பெறும் கணவன், மனைவி இருவருக்கும் வேலையே முதன்மையானதாகவும், அதுவே அவர்களுக்கு உயிராகவும் அமைந்துவிட்டதனையும் குறிப்பிடும் இந்நூலாசிரியர் அக்கால மக்களின் வாழ்க்கைச்சூழலிலிருந்து, இக்கால மக்களின் வாழ்க்கைச்சூழல் மாறிவிட்டது என்பதனையும் விளக்குகிறார். அக்கால மக்களின் வாழ்க்கைச்சூழலோடு, இக்கால மக்களின் வாழ்க்கைச் சூழலை வேறுபடுத்திக் காட்டுவதற்கு அவர் ‘தலைவன் பிரிந்து சென்றுவிடுவாரோ‘ என அச்சப்படும் தலைவியைத் தோழி ஆறுதல்படுத்துவதற்காகச் சொன்னதே என்று

**”வினையே ஆடவர்க்கு உயிரே, வாள்நுதல்" (குறுந். 135)**

எனத் தொடங்கும் பாடலைச் சான்றாக்கியுள்ளார்.

உலகக் காதலர்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டியாக இருப்பது ‘யாயும் ஞாயும் யார் ஆகியரோ’ எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலாகும். இதற்குரிய காரணத்தை எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்த ஆண், பெண் ஆகிய இருவர் காதல்கொள்ளும் புனிதம் இப்பாடலிலேயே இருக்கின்றது என்கிறார்.

தொல்காப்பியம், சங்கப்பாடல்கள், திருக்குறள் ஆகியவை ‘பாலியற் கல்வி‘ பற்றியும் பேசி, மக்களின் மனத்தைப் பக்குவப்படுத்த முயற்சித்துள்ளன. 'காமப்பசி' தீர்ப்பதில் நெறிமுறைகள் இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார்.அந்தக் காமம் உளவியலும், உடலியலும் சார்ந்து இயங்குவதால் அதனை முழுவதுமாக அனுபவித்து முடித்தல் இயலாததாகும் என்று தம் கருத்தை முன்வைக்கும் இவர் இதற்குரிய சான்றாக,

**‘காமம் காமம் என்ப, காமம்‘ (குறுந். 136)**
**‘காமம் காமம் என்ப காமம்‘ (குறுந். 204)**

ஆகிய இரு பாடல்களைச் சுட்டியுள்ளார்.

**முடிவுரை**

தமிழண்ணல் குறுந்தொகையை மையமிட்டு எழுதியுள்ள ‘குறுந்தொகைச் செல்வம் :வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம்‘ என்னும் நூல் உணர்த்தும் செய்திகள் இக்கட்டுரையில் விளக்கப்பெற்றுள்ளன. குறுந்தொகையை பரந்துபட்ட நிலையில் மக்களிடம் அறிமுகப்படுத்தும் நோக்கில் தமிழண்ணல் இந்நூலை எழுதியுள்ளார்.. உலகச் செவ்வியல் இலக்கியங்களிலிருந்து, தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் வேறுபட்டுத் தனித்தன்மையுடன் இருப்பதற்குரிய காரணம் அதில் உயர்வு நவிற்சி குறைவாகவும், ஓரளவு நம்பக்கூடியதாகவும் அமைந்ததேயாகும் என்பதனைக் கண்டறிந்து நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். சங்ககாலத்தில் நிலவிய சமுதாயக் குற்றமான பரத்தையர்ப் பிரிவைக் களைந்து குடும்பத்தில் ஒற்றுமை நிலவவேண்டும் என்பதற்காகவே புலவர்கள் அதனைப் பாடியுள்ளனர் என்றும், பண்டைக்கால மக்களின் வாழ்க்கைச் சூழலோடு, இக்கால மக்களின் வாழ்க்கைச் சூழலை ஒப்பிடுவதற்கும் குறுந்தொகை பாடல்கள் உதவுகின்றன என்றும் நூலாசிரியர் குறித்துள்ளார்.

**துணைநூற் பட்டியல்**

1. அருணாசல தேசிகர். சோ. (ப.ஆ). 1933. குறுந்தொகை மூலம். சென்னை: பி.என். அச்சகம்.
2. இராகவையங்கார். ரா. (உரை.ஆ). 2013. குறுந்தொகை விளக்கம். சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
3. சாமிநாதையர். உ.வே. (உரை.ஆ. ரூ ப.ஆ). 1937. குறுந்தொகை. சென்னை: கேஸரி அச்சுக்கூடம்.
4. தமிழண்ணல். 2009. குறுந்தொகைச் செல்வம்-வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம், மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

5. தமிழண்ணல். 2009. குறுந்தொகைக் குறும்படம்:உள்ளங்கள் ஒன்றிடும் அன்றில் பறவைகள், மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
6. தமிழண்ணல். 2009. குறுந்தொகை அறிமுகம்:உச்சத்தைத் தொடும் உணர்ச்சி ஓவியங்கள், மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
7. தமிழண்ணல். 2009. குறுந்தொகை விருந்து:மனத்தைக் கவரும் மாணிக்கப் பரல்கள், மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
8. திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன் (உரை.ஆ ரு ப.ஆ.). 1915. குறுந்தொகை மூலமும் புத்துரையும். வேலூர்: வித்யாரத்னாகர அச்சுக்கூடம்.